தலைமைச் செயலகத்தில் நேற்று (19.10.2023) தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்களை, ஜப்பான் நாட்டின் Consul – General Mr. TAGA Masayuki மற்றும் Deputy Consul – General Mr. MIYATA Kenji ஆகியோர் மரியாதை நிமித்தமாக சந்தித்தார்கள். சட்டமன்ற பேரவைச் செயலாளர் முனைவர் கி. சீனிவாசன் உடனிருந்தார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (19.10.2023), சென்னை, அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், உலக விபத்து தினத்தை முன்னிட்டு, விபத்து மற்றும் முதலுதவி கையேட்டினை வெளியிட்டார். இந்நிகழ்வில் வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர் ஜட்ரீம் இரா.மூர்த்தி, பெருநகர சென்னை மாநகராட்சி நகர அமைப்பு தலைவர் இளைய அருணா, அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.பாலாஜி, பேராசிரியர்கள் மற்றும் செவிலியர்கள் கலந்து கொண்டனர்.

தமிழகத்தில் குறவர் சமுதாய மக்களை பாதுகாத்து வருவது

'திராவிட மாடல்' ஆட்சி நாயகன் மு.க.ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. அரசு!

ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பெருமிதம் !

தேனி, அக். 20 -

தேனி மாவட்ட குறவர் சங்கத்தலைவர் ராஜா தலைமையில் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமியைச் சந்தித்து கோரிக்கை மனு கொடுத்து தீர்வு பெற்றனர்.

தமிழகத்தில் குறவர் சமுதாய மக்களை பாதுகாத்து வருவது திராவிட மாடல் ஆட்சி நாயகன் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான தி.மு.க. அரசு என்று தேனி மாவட்ட குறவர் சங்கத்தலைவர் ராஜா தலைமையில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமியைச் சந்தித்து கோரிக்கை மனுக்களை கொடுத்து தீர்வு வழங்கிய போது அமைச்சர் ஐ.பெரியசாமி பெருமிதமாக கூறினார்.

தேனி மாவட்டத்தைச் சேர்ந்த குறவர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் நூற்றுகணக்கானோர் மாவட்ட குறவர் சங்கத் தலைவர் சங்கர் தலைமையில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமியைச் சந்தித்து கோரிக்கை மனு கொடுத்தனர். அந்த மனுவில் தேனி மாவட்டம் அம்மாபட்டி வடவீரநாயக்கன்பட்டியில் குடிசை மாற்று வாரியம் மூலம் குறவர் சமுதாய மக்கள் குடியிருப்புக்காக கட்டப்பட்ட 110 வீடுகளை தங்கள்

மாவட்டத்தைச் சேர்ந்த குறவர் சமுதாய மக்களுக்கு வழங்க வேண்டுமென்றும் மீதமுள்ள 80குடும்பங்களுக்கும் குடியிருப்புகள் கட்டித்தரவேண்டுமென்று கோரிக்கை மனு கொடுத்தனர். கோரிக்கை மனுக்களை பெற்ற ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி தேனிமாவட்ட ஆட்சியரை தொடர்பு கொண்டு முறைப்படி பதிவு செய்யப்பட்ட குறவர் சமுதாய மக்களுக்கு வழங்க வேண்டுமென கூறியதோடு மீதமுள்ள குடும்பங்களுக்கும் குடியிருப்புகள் கட்டித்தர நடவடிக்கை எடுக்க வேண்டுமென உத்தரவிட்டார். அப்போது குறவர் சமுதாய மக்கள் மத்தியில் பேசிய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி இந்தியாவிலேயே எந்த ஒரு முதல்வரும் செயல்படுத்த முடியாத அளவிற்கு பழங்குடி இன மக்களுக்கும், குறவர் சமுதாய மக்களுக்கும் மற்றும் மலைவாழ் மக்களுக்கும் என்னற்ற நலத்திட்டங்களை திராடவிட மாடல் ஆட்சி நாயகன் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்.

இதுவரை எந்த முதல்வரும் குறவர் சமுதாய மக்கள் இல்லங்களுக்கும் சென்றதில்லை ஆனால் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறவர் சமுதாய மக்கள் இல்லத்திற்கு நேரில் சென்று உணவு அருந்தி அவர்களை நலம் விசாரித்தது குறவர் சமுதாய மக்களின் வளர்ச்சியில் தமிழக முதல்வரின் செயல்பாட்டிற்கு எடுத்துகாட்டாக உள்ளது என்றார். தங்கள் கோரிக்கையை உடனடியாக நிறைவேற்றிய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர்ஐ.பெரியசாமியை பாராட்டியும் அவருக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் குறவர் சமுதாய மக்கள் சந்தன மாலையை அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு அவர்களுக்கு அணிவித்து நன்றி தெரிவித்தனர்.

அப்போது அங்கு வந்திருந்த குறவர் சமுதாயத்தை சேர்ந்த சிறுவனை நேரில் அழைத்த அமைச்சர் ஐ.பெரியசாமி என்ன படிக்கிறாய் எங்கு படிக்கிறாய் என கேள்வி கேட்டு சிறுவன் ஆங்கிலத்தில் பதில் சொல்லியதை கேட்டு மகிழ்ந்தார்.

நிகழ்ச்சியின் போது தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தண்டபானி, ஆத்தூர் நடராஜன், திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. பொருளாளர் கு.சத்திய மூர்த்தி, ஒன்றிய செயலாளர்கள் திண்டுக்கல் நெடுஞ்செழியன், ரெட்டியார்சத்திரம் ப.க.சிவகுரு சாமி, திமுக நிர்வாகி அம்பை ரவி, அகரம் பேரூராட்சிமன்ற தலைவர் நந்தகோபால், திண்டுக்கல் மாநகர பகுதி செயலாளர் அ.ராஜேந்திர குமார், மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி பாறைப்பட்டி வாஞ்சிநாதன், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் பஞ்சம்பட்டி மணி, மாநகர சிறுபான்மையினர்அணி அமைப்பாளர் டோமினிக் செல்வராஜ், துணை அமைப்பாளர் நஜிப், ஊராட்சிமன்ற தலைவர்கள் கோனூர் வெள்ளதாய் தங்க பாண்டியன், அனுமந்தராயன்கோட்டை நிர்மலா இன்பராஜ், சக்கரவர்த்தி மணிமாறன், கோனூர் திருப்பதி, வீரக்கல் செல்வி காங்கேயன், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர்கள் நெல்லை சுபாஷ், ஆனந்த், மற்றும் திமுக நிர்வாகி டாஸ்மாக் வடிவேலு, நந்தி நடராஜன், உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

'நீட்' தேர்வை எதிர்த்து மாபெரும் கையெழுத்து இயக்கம்!

மாவட்டச் செயலாளர் – அமைச்சர் சி.வெ.கணேசன் அறிக்கை!

கடலூர், அக். 20-

கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பின்படி கழக இளைஞர் அணிச் செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி கழக இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவர் அணி இணைந்து 'நீட் தேர்வை ரத்துச் செய்யக்கோரி மாபெரும் கையெழுத்து இயக்கம்

கடலூர் மேற்கு மாவட்ட அவைத்தலைவர் டாக்டர் கொ.நந்தகோபாலகிருஷ்ணன் தலைமையில் நாளை (21.10.2023 - சனிக்கிழமை) காலை 9.30 மணியளவில் நெய்வேலி தொ.மு.ச. அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

அதுசமயம் மாவட்டக் கழக நிர்வாகிகள், சட்டமன்ற, நாடாளுமன்ற இந்நாள் முன்னாள் உறுப்பினர்கள், பொதுக்குழு, செயற்குழு உறுப்பினர்கள், ஒன்றியக் கழக, நகர கழக, பேரூர்க் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், மாவட்ட இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவர் அணி, அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், தொ.மு.ச. நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுகொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வெ.கணேசன் தமது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

சென்னை வடக்கு மாவட்ட பொறியாளர் அணி சார்பாக கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு திராவிடர் கழக துணைப் பொதுச் செயலாளர் வே.மதிவதனியை நடுவராகக் கொண்டு நடைபெற்ற பேச்சுப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு மாவட்டச் செயலாளர் தா.இளைய அருணா பரிசுகளை வழங்கினார். இதில் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. , சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.டி.சேகர், ஜட்ரீம் ஆர். மூர்த்தி, ஜே.ஜே.எபினேசர், பொறியாளர் அணி நிர்வாகிகள் இரா.நரேந்திரன், லியோ டி.சுரேஷ் உள்ளிட்ட பகுதிச் செயலாளர்கள், வட்டச் செயலாளர்கள், நிர்வாகிகள்,பொறியாளர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தாம்பரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பாரத மாதா சாலை அன்னை அஞ்சுகம் நகர் பகுதிகளில் ஆக்கிரமிப்புகளை அகற்றும் போது, வீடுகளை இழந்த 32 பேருக்கு தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், அன்னை அஞ்சுகம் நகர் திட்ட பகுதியில் வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு அதற்கான ஆணையை தாம்பரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர், மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா பயனாளிகளிடம் வழங்கினார். உடன் அதிகாரிகள் மற்றும் கழக தோழர்கள் உள்ளனர்.

சங்கரன்கோவில் முரசொலி முகவர்

எம்.பழனியம்மாள் தந்தை மறைவு!

தென்காசி, அக். 20 -

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் முரசொலி முகவர் எம்.பழனியம்மாள் அவர்களின் தகப்பனார் முன்னாள் முரசொலி முகவர் ப.சங்கரமகாலிங்கம் (வயது 82)வயது முதிர்வு காரணமாக மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் 41 லட்சுமி புரம் 4ம் தெருவில் வசித்து வந்தவர் முன்னாள் முரசொலி முகவர் ப.சங்கரமகாலிங்கம் (வயது 82) அவர்கள் வயது முதிர்வு காரணமாக அவரது இல்லத்தில் நேற்று (19.10.2023- வியாழக்கிழமை) அதிகாலை 1 மணி அளவில் இயற்கை எய்தினார்.

இது பற்றிய தகவல் அறிந்ததும் கழக நிர்வாகிகள் பலர் அவரது உடலுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

மறைந்த ப.சங்கர மகாலிங்கம் கழகத்தின் மீது அதிக பற்று கொண்டவர்.கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக முரசொலி முகவராக இருந்துள்ளார். அன்னாருக்கு 2 மகள்கள் உள்ளனர். அதில் எம்.பழனி யம்மாள் முரசொலி முகவராக இருந்து வருகிறார்.

தெலுங்கானா சட்டப்பேரவைத் தேர்தல்:

ராகுல்காந்தி சைக்கிள் பேரணி பிரச்சாரம்!

முலுகு, அக்.20-

தெலுங்கானா சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி, காங்கிரஸ் முன்னணித் தலைவர் ராகுல் காந்தி தலைமையில் மோட்டார் சைக்கிள் பேரணி நடைபெற்றது.

119 இடங்களைக் கொண்ட தெலுங்கானா சட்டப்பேரவைக்கு நவம்பர் 30ஆம் தேதி ஒரே கட்டமாக தேர்தல் நடைபெறுகிறது. தெலுங்கானா தனி மாநிலமாக உருவாக்கப்பட்டது முதலே கே.சந்திரசேகர ராவ் தலைமையிலான BRS கட்சி ஆட்சி செய்து வருகிறது. இந்த தேர்தலில் காங்கிரஸ் BRS கட்சி இடையே கடும் போட்டி நிலவுகிறது. இந்நிலையில், தெலுங்கானாவில் காங்கிரஸ் கட்சி முதன்முறையாக ஆட்சியைக் கைப்பற்றும் என்று கருத்துக் கணிப்பு முடிவுகள் தெரிவிக்கின்றன. சட்டமன்றத் தேர்தல் நெருங்குவதால் அரசியல் கட்சிகளின் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

தெலுங்கானாவின் முலுகு மாவட்டத்தில், காங்கிரஸ் முன்னணித் தலைவர் ராகுல் காந்தி, பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி ஆகியோர் நேற்று முன்தினம் கூட்டாக பிரச்சாரத்தை தொடங்கினர்.

இந்நிலையில், ஐதராபாத்தில் ராகுல் காந்தி தலைமையில் காங்கிரஸ் கட்சி சார்பில் பிரச்சார பயணம் நடைபெற்றது. மோட்டார் சைக்கிள் பேரணியுடன் வாகனங்கள் ஐதராபாத் சாலையில் அணிவகுத்துச் சென்றன.

பேரணியின் நிறைவு நிகழ்ச்சியில் பேசிய ராகுல் காந்தி, பாரதீய ஜனதா கட்சியும் பாரதீய ராஷ்டிரிய சமிதியும் மறைமுகமாக கூட்டணி வைத்திருப்பதாக சாடினார். தெலுங்கானாவில் பாரதீய ராஷ்டிரிய சமிதி ஆட்சியில் பல்வேறு ஊழல்கள் நடந்துள்ளதாகவும், அதனை ஒன்றியத்தை ஆளும் பா.ஜ.க. அரசு கண்டுகொள்வதில்லை என்றும் ராகுல் காந்தி குற்றஞ்சாட்டினார்.

மத்தியில் மீண்டும் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால்

நாடு சர்வாதிகார நாடாக மாறும்!

காளையார் கோவில் பொதுக்கூட்டத்தில் அமைச்சர் கே.ஆர் .பெரியகருப்பன் பேச்சு

சிவகங்கை, அக்.20-

சிவகங்கை மாவட்டம் காளையார் கோவிலில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டினை முன்னிட்டு காளையார் கோவில் கிழக்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் நேற்று முன்தினம் பொதுக் கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா காளையார்கோவில் தெப்பக் குளம் கீழ்கரை யில் ஒன்றிய செயலாளர் வே.ஆரோக்கியசாமி தலைமையில் நடைபெற்றது.

கலைஞர் நூற்றாண்டு பிறந்த நாள் பொதுக்கூட்டம் மற்றும் 7000 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிவகங்கை மாவட்ட கழக செயலாளரும், கூட்டுறவுத் துறை அமைச்சருமான கே ஆர். பெரிய கருப்பன் பேசியதாவது.

தலைவர் கலைஞரின் நூற்றாண்டு விழாவை இந்த ஆண்டு ஜூன் 23 முதல்அடுத்த ஆண்டு ஜூன் 2024 வரை ஓராண்டுக்கு கொண்டாட உள்ளோம். கழக தலைவர் அறிவித்த வாறு பொதுக் கூட்டங்கள் மற்றும் நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டு வருகிறது. இந்த பொதுக்கூட்டத்தினை மாநாடாக மாற்றும் வகையில் ஒன்றிய கழகச் செயலாளர் ஆரோக்கியசாமி தலைமையில் ஒன்றிய கழக நிர்வாகிகள் சிறப்பான ஏற்பாடுகளை செய்ததற்கு மாவட்டக் கழகம் சார்பில் பாராட்டினைதெரி வித்துக் கொள்கின்றேன்.

கழகத் தலைவர் கலைஞர் அவர்களுக்கு நாம் எடுக்கும் விழா ஒவ்வொரு தமிழருக்கும் எடுக்கும் விழாவாகும். ஐந்து முறை முதல்வராக கலைஞர் அவர்கள் பல்வேறு நலத்திட்ட பணிகளை தமிழகத்திற்கு செய்துள்ளார். பேரறிஞர் அண்ணா அவர்கள் கழகம் துவங்கியபோது தேர்தலில் போட்டியிடாமல் இருந்தது. பின்னர் மக்கள் பிரச்னைகளை தேர்தலில் போட்டியிட்டு தீர்க்கமுடியும் என்ற அடிப்படையில் தேர்தலில் முதன்முறையாக போட்டியிட்டது. அதில் 15இடங்கள் தொடர்ந்து நடைபெற்ற தேர்தலில் 65இடங்களில் வெற்றி பெற்றது.

1967ல்கழகம் ஆட்சி அமைக்கப்பட்டது. முதல் முறையாக பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்றார் அண்ணா அவர்கள் சிறப்பாக பணியாற்றினார். அவர் உடல் நலக் குறைவால் மறைவுற்ற பின் தலைவர் கலைஞர் அவர்கள் கழகத் தலைவராகவும் முதல்வராகவும் பொறுப்பேற்று ஐந்து முறை முதல்வராக திறம்பட பணியாற்றியுள்ளார்.

தந்தை பெரியாரின் கொள்கைகளை, பேரறிஞர் அண்ணாவின் லட்சியங்களை, தனது வாழ் நாள் வரை கடைப்பிடித்து அதை செயல்படுத்தி காட்டியவர் தலைவர் கலைஞர். முதல்வராக அவர்செய்த சாதனைகளை இந்திய கண்டத்தில் எந்த முதல்வரும் இதுவரை செய்ததில்லை. அத்தகைய சாதனை படைத்த முதல்வராக நமது தலைவர் கலைஞர் அவர்கள் விளங்கி உள்ளார்கள். தனது 14 வயது முதல் 94 வயது வரை நமது மக்களுக்காகவும், மொழி, இனத்திற்காகவும்,தன் வாழ்க்கையை அர்ப்பணித்தவர்.

திடீர் பாசம்!

ஆட்சியில் இருந்தாலும் சரி எதிர்க்கட்சித் தலைவராக இருந்தாலும் கலைஞர் அவர்கள் தமிழகத்தின் உரிமைக்காக குரல்கொடுத்த வர். அவரால் மொழி இனம் பாதுகாக்கப்பட்டு வந்தது . மற்ற கட்சிக்கு இல்லாத சிறப்பு தி.மு.க.விற்கு உண்டு. திராவிடம் என்ற பெயரைச் சொல்லிக் கொள்ளும் அ.தி.மு.க. திராவிடத்தை விட்டு விட்டு பாஜகவிடம் அடிமை கட்சியாக மாறியது. பிரதமர் மோடி சி.ஏ.ஏ. வேளாண்மை சட்டம் உட்பட பல்வேறு மக்கள் விரோத சட்டங்களை கொண்டு வந்த போது பா.ஜ.க.வை அ.தி.மு.க. ஆதரித்தது. இதனால் அதிமுக

திராவிடம் என்ற கொள்கையை கைவிட்டு விட்டது. இப்பொழுது பா.ஜ.க.வுடன் கூட்டணி இல்லை என்று சொல்லும் அ.தி.மு.க.விற்கு திடீரென்று சிறுபான்மையினர் மீது பாசம் வந்துள்ளது.

சிறுபான்மை சட்டத்தை ஆதரித்து நடைமுறைக்கு கொண்டு வந்தில்அ.தி.மு.கவிற்கு பங்கு உண்டு.இதை மக்கள் நன்றாக புரிந்து கொள்ள வேண்டும். தேர்தலுக்காக இத்தகைய அறிவிப்புகளை அ.தி.மு.க . செய்து வருகிறது. 9 1/2 ஆண்டு கால பா.ஜ.க. ஆட்சியில் பிரதமர் மோடி என்ன திட்டங்களை செய்தார் என்று கூறி வாக்கு கேட்க வாக்கு கேட்க முடியாது. கறுப்பு பணத்தை மீட்டு ஒவ்வொருவர் கணக்கில் ருபாய் 15 லட்சும் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும் என்று அறி வித்தார். ருபாய் 15 கூட வரவில்லை .ஒன்பது ஆண்டுகளுக்குமேலாகி விட்டது.

ஒன்றிய அரசே காரணம்!

ஆண்டுக்கு 2 லட்சம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு தரப்படும் என்று மோடி சொன்னார்.அந்த வாக்குறுதி என்னவாயிற்று என்று தெரியவில்லை பெட்ரோல் டீசல் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. அதற்கு காரணம் மோடி அரசுதான். விலைவாசி கடுமையாக ஏற்றத்துக்கு காரணம் ஒன்றிய அரசு தான் ஆகும். உலக அளவில் கச்சா எண்ணெய் விலை குறைந்தும் பெட்ரோல் டீசல் விலையை குறைக்காமல் இருப்பதுமே விலைவாசி ஏற்றத்திற்கு காரணம் ஒன்றிய அரசே ஆகும்

இதற்கு முழுப்பொறுப்பு மோடி தான் ஏற்றிட வேண்டும். இன்னும் ஆறு மாதத்தில் பாராளுமன்றத் தேர்தல் நடைபெற உள்ளது

இந்த பாராளுமன்ற தேர்தல் நமது இந்தியா கூட்டணி வெற்றி பெற வேண்டும். மோடி ஒன்பது ஆண்டு காலம் செய்த சாதனைகளில் ஏதும் சொல்ல முடியாமல் ஊழல் அதிகம் செய்துள்ளார். அதை மறைப்ப தற்கு ஜாதி,மத, மோதல்கள், சிறுபான்மை இனத்தவர்மீது தாக்குதல்கள், நடைபெற்று வருகிறது.இதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். சிறுபான்மை நலம் காக்கும் இயக்கம் தி.மு.க. ஒன்றுதான். கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு தி.மு.க. தேர்தலில் 50, 5 தேர்தல்வாக்குறுதிகளை அறிவித்தது.

இரண்டரை ஆண்டுகளில் 85 சதவாக்குறுதி களை நிறைவேற்றி உள்ளது .இதை நாம் மக்களிடம் எடுத்துக் கூறவேண்டும் . வீடு தோறும் சென்று பிரச்சாரம் செய்ய வேண்டும். இதைத்தான் நம் முடைய முதல்வர் தளபதி அவர்களும் விரும்புகிறார்கள் .

நடைபெற உள்ள பாராளுமன்ற தேர்தலில் நாம் 39 தொகுதிகளிலும் வெற்றி பெறவேண்டும். நமது முதல்வரின் இரண்டரை ஆண்டு பொற்கால ஆட்சிக்கு தரும் சான்றிதழாக அமையும். தற்போது நாட்டில் சர்வாதிகார சூழ்நிலை நிலவுகிறது. மீண்டும் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால் சர்வாதிகார நாடாக இந்தியா மாறிவிடும். எனவே நாம் கிராமங்கள் தோறும் சென்று இந்தியா கூட்டணி வெற்றிஅடைய கழக தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கரத்தை வலுப்படுத்துவதற்கும் தயாராக வேண்டும் . இதை முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் கூடத்தில் சபதம் ஏற்போம் என்று கூறிக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கே ஆர் . பெரியகருப்பன் பேசினார்.

சென்னை சுற்றுலா வளாக கூட்டரங்கில், சுற்றுலா வளர்ச்சித்திட்டப் பணிகள் குறித்த சுற்றுலா அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில் நேற்று (19.10.2023) நடைபெற்றது. இக்கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மை செயலாளர் டாக்டர். க.மணிவாசன், முதன்மை செயலாளர் / சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் / மேலாண்மை இயக்குநர் திருமதி.காகர்லா உஷா.ஆகியோர் கலந்து கொண்டனர்.